## ‘இந்து மதம்’ என்றால் பா.ஜ.க. தானா?

# பக்தர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் தி.மு.க. அரசு!

## ‘நக்கீரன்’ இணையதளத்திற்கு முனைவர் இராம சுப்பிரமணியம் பேட்டி!

**சென்னை,ஆக.16–**

**நக்கீரன் இணையதளத்திற்கு கல்வியாளர் முனைவர் இராம சுப்பிரமணியம் நேர்காணல் அளித்துள்ளார்.**

**அதில் அவர் கூறியிருப்பதாவது:**

**கேள்வி :** *அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு 2024 ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் பழனியில் நடைபெறவுள்ளது. இதற்கு பா.ஜ.க. மாநிலத் தலைவர் “விரைவில் முதலமைச்சர் ஜெய் ஸ்ரீராம் சொல்லிவிடுவார்” என விமர்சனம் செய்கிறார். இதேபோல் இராம. சீனிவாசன் ஆகியோரும் விமர்சனம் வைக்கிறார்களே?*



**இராம சுப்பிரமணியம்:** முதல்வரின் வழிகாட்டுதலின் பேரில் இந்த மாநாடு சிறப்பாக நடக்க இருக்கிறது. இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு பங்களிப்பு அபரிமிதமானது. மாநாடு தொடர்பாக பல கூட்டங்களை நடத்தியுள்ளார் அமைச்சர் சேகர்பாபு. அகில உலக அளவில் நடக்கக் கூடிய மாநாடு என்பதால் தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியா முழுவதிலும் இருந்தும், உலக அளவில் இருந்தும் முருகன் மேல் பக்தி கொண்டவர்கள் வர உள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து வரும் முக்கிய நபர்கள் இந்த மாநாட்டில் பேசப் போகிறார்கள். நிறைய ஆய்வுக் கட்டுரைகள் சமர்பிக்கப்போகிறார்கள். அந்தப் பொறுப்பை மு.பெ. சத்தியவேல் முருகனார் எடுத்துக்கொண்டுள்ளார்.

ஆன்மிக மற்றும் இலக்கிய படைப்பாளர்களை சிறப்பிக்கும் வகையில் விருதுகள் அளிக்க உள்ளனர். கருத்தரங்கம், பட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகள் நடக்க உள்ளது. தேசமங்கையர்க்கரசி, சுகிசிவம் உள்ளிட்டவர்கள் இதற்கான பணிகளை செய்துகொண்டிருக்கின்றனர். அறுபடை வீடுகளின் அரங்குகள் அங்கு அமைக்கப்பட உள்ளது. இந்த மாநாடு சிறப்பாக நடைபெற சைவ சமயத்தைச் சேர்ந்த மடாதிபதிகள் பங்கும் இருக்கிறது. மிகச்சிறந்த கூட்டு முயற்சியால் இந்த மாநாடு சிறப்பாக நடைபெற உள்ளது.

**கேள்வி:** *உங்க அனுபவத்தில் இதுபோன்ற மாநாடு நடைபெற்றுள்ளதா?*

**இராம சுப்பிரமணியம்:** இதுவரை நடைபெறவில்லை. தமிழ்நாட்டில் அரசு சார்பில் நடைபெறும் பெரிய மாநாடு இது தான்.

**கேள்வி :** *ஓட்டுக்காகத்தான் இந்த மாநாட்டை நடத்துகிறார்கள் என்கிறார்களே?*

**இராம சுப்பிரமணியம் :** ஓட்டுக்காகவே ராமரின் மகுடத்தை தூக்கிக்கொண்டு பிரதமர் மோடி நடந்தார். அதனை மீடியாக்கள் காண்பித்தன. அயோத்தியில் ஏராளமான வி.ஐ.பி.க்களை வரவைத்து, அவர்களுக்கு தங்கும் இடம் முதல் கொண்டு பல ஏற்பாடுகளை செய்தார்கள். அதற்கு எவ்வளவு விளம்பரங்கள்ச் செய்தார்கள். உத்திரப்பிரதேசம் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சிகளுக்கு ஏராளமாக செலவு செய்து விளம்பரங்கள் செய்தார்கள். உண்மையான பக்தர்களுக்காக இந்த முத்தமிழ் முருகன் மாநாடு நடத்தக் கூடாதா?

வெகுநாட்களாக முருக பெருமானுக்கு இப்படி ஒரு விழா எடுக்கணும் என்பது பக்தர்களின் ஆசை. அதற்காக அரசு தேர்ந்தெடுத்த இடம் சரியானது. முதல்வரும், அமைச்சரும் தேர்வு செய்த இடம் பழனி. இது அறுபடைவீடுகளில் முக்கியமானது. மாநாடுக்கு வரும் அனைவருக்கும் போக்குவரத்து வசதிகள், குடிநீர், சாப்பாடு, தகுந்த கழிப்பறைகள், பிரமாண்டமான பந்தல் என பல்வேறு பணிகளை இந்து அறநிலையத்துறை அதிகாரிகள் தீவிரமாக செய்து வருகிறார்கள்.

**கேள்வி:** *திமுகவுக்கு முருகன் மீது திடீர் அக்கறை வந்திருக்கிறது என விமர்சனம் வருகிறதே?*

**இராம சுப்பிரமணியம்:** இந்து மதம் என்றால் பா.ஜ.க.தானா?. நீங்கதான் கடவுள்களை சப்ளை பண்றீங்களா? இந்து மதத்திற்கு நீங்கதான் அத்தாரிட்டியா? அவர்கள் பேசுவது அபத்தமானது. திமிர்த்தனம். முதலமைச்சர் ‘ஜெய் ஸ்ரீராம்’ சொல்லிவிடுவார் என்கிறார்கள். தேர்தல் முடிவுக்குப் பிறகு ஜெய் ஸ்ரீராம் என பா.ஜ.க.வினரே சொல்வதை நிறுத்திவிட்டார்கள். பூரி ஜெகநாதரை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ‘வேல் யாத்திரை’ என்ற பெயரில் தமிழக பா.ஜ.க. புருடா விட்டுக்கொண்டு அலைந்தார்கள். அதில் முருக பக்தர்களே இல்லை.

திமுக அரசாங்கம் ஆன்மீகத்திற்கு எதிரானது கிடையாது. அயோத்திக்குப் போக ஆசைப்பட்டவர்கள் அரசு சார்பில் அனுப்பி வைக்கப்பட்டனர். காசிக்கு போக விரும்பியவர்களை அனுப்பி வைக்கப்பட்டனர். அறுபடைவீடுகளுக்கு போக விரும்பிய 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த அரசு அதற்கான ஏற்பாடுகளை செய்து தந்தது. இப்போது ஆடி மாதம் அம்பாள் கோயிலுக்கு போக விரும்பியார்களுக்கு ஏற்பாடு செய்கிறது?. இதேபோல் எந்த அரசாங்கம் செய்கிறது. பக்தர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து தி.மு.க. அரசு செய்கிறது. வேறு எந்த அரசும் செய்ய முடியாது.

**– நன்றி‘**

**நக்கீரன் இணையதளம்.**



சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில் 78 வது சுதந்திர தினத்தையொட்டி கழக துணை அமைப்பு செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி தேசியகொடியினை ஏற்றி போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசினை வழங்கி சிறப்பு உரையாற்றினார். உடன் வட்டக் கழக செயலாளர் வெங்கடேசன் பள்ளி ஆசிரியர்கள் உள்ளனர்.

## முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டத்தினால்

# பள்ளிகளில் மாணவரின் சேர்க்கை விகிதம் அதிகரிப்பு!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம்!

செஞ்சி, ஆக. 16 -

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் கலையூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 10.19 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடமும், தொண்டூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 9.77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார்.

ஒன்றியக் கவுன்சிலர்கள் ஏலக்கண்ணி, அமிர்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் விமலா, சின்னையா ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 19. 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தினையும், புதிய நியாய விலை கட்டிடத்தையும் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

அப்போது களையூரில் அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை திறந்து வைத்து அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்,

கிராமப்புறத்தில் உள்ள குழந்தைகள் ஏழ்மை, வறுமையின் காரணமாக அவர்கள் பள்ளி செல்கின்ற நிலை தடைபடக் கூடாது என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் காலை சிற்றுண்டி திட்டத்தை கொண்டு வந்துள்ளார். இத்திட்டம் கொண்டு வந்ததின் காரணமாக இன்றைக்கு அரசு பள்ளிக்கும் அரசு உதவி பெறும் பள்ளிக்கும் மாணவர்களின் சேர்க்கை விகிதம் உயர்ந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் கிராமப் பகுதியில் படிக்கும் மாணவர்கள் பல்வேறு காரணங்களால் 8, 10, 12ஆம்வகுப்பு வரை படித்து நின்று விடுகின்றனர் அவர்கள் உயர் கல்வி பட்டப்படிப்பு படிக்க செல்ல முடியவில்லை அவர்களின் பொருளாதார நிலையை உணர்ந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாணவிகள் உயர்கல்வி படிப்பதற்கு புதுமைப்பெண் திட்டத்தினையும் மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்து மாதம் ஆயிரம் ரூபாய்வழங்கி எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற தொலை நோக்கு சிந்தனை யுடன் இத்திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.

தொடர்ந்து கனையூர் அரசு தொடக்கப் பள்ளியில் உள்ள சமையலறை கூடத்தை ஆய்வு செய்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் குழந்தைகளுக்கு சமைக்கப்படும் உணவினை சாப்பிட்டு பார்த்து உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, இளம்வழுதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உதயகுமார், இளங்கோவன்,மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், மாவட்ட அமைப்புசாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கண்ணையன்.நிர்வாகிகள் பாண்டியராஜன் கண்ணன்,பிரபாகரன்,மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கார்வண்ணன் உள்ளிட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## ஒன்றிய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் ஒன்றிய மக்கள் தொடர்பகம் சார்பில்

# பெரம்பலூரில் அரசின் மக்கள் நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி!

## கே.என்.அருண் நேரு எம்.பி. தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், ஆக, 15 -

மத்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மத்திய மக்கள் தொடர்பகம் சார்பில் பெரம்பலூரில் அரசின் மக்கள் நல திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நகராட்சிக்குட்பட்ட ராசி மண்டபத்தில் நடைபெற்றது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியை பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு தொடங்கி வைத்தார்

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு தலைமை வகித்தார். பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் பேசியதாவது:

பொதுமக்கள், கல்லூரி, பள்ளி மாணவ, மாணவிகள் அரசின் திட்டங்களை முழுமையாக அறிந்து கொண்டு பயன்படுத்திக்கொள்ளவேண்டும். மத்திய, மாநில அரசுகளின் போட்டித் தேர்வுகளில் பங்கேற்க மாணவ - மாணவிகளுக்கு அரசின் சார்பில் பல்வேறு உதவிகள் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றது. அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்று அரசு வேலைவாய்ப்புகளை பெற அனைவரும் முயற்சி எடுக்க வேண்டும். மாணவ - மாணவிகளுக்கு கல்விக் கடனுதவி கிடைப்பதற்கு சிறப்பு முகாம்களை நடத்த மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் இதர வங்கிகளுக்கு அறிவுறுத்தியுள்ளோம். அனைவரும் நன்கு படித்து, நல்ல மனிதர்களாக உருவாக மனதார வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர் பல்வேறு விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றிப் பெற்ற கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

முன்னதாக சுகாதார பணிகள் துணை இயக்குநர் மருத்துவர் பிரதாப் குமார், காசநோய் துணை இயக்குநர் மருத்துவர் நெடுஞ்செழியன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பரத்குமார், ஸ்ரீரங்கம் அஞ்சலக கோட்ட கண்காணிப்பாளர் பழனிசாமி , ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சமூக நல அலுவலர் ஜெயஸ்ரீ, கிராம சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குனர் ஆனந்தி ஆகியோர் அவர்களது துறைகள் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கி கூறினர்.

நிகழ்ச்சியில் அஞ்சல் துறை மூலம் தேசிய கொடி வழங்கல் மற்றும் செல்வ மகள் சேமிப்பு திட்டம் தொடர்பான விழிப்புணர்வு கையேடுகள் வெளியிடப்பட்டது. இதில் பெண் குழந்தையை காப்போம் பெண் குழந்தைக்கு கற்பிப்போம், மாத்ரு வந்தனா, திறன் இந்தியா, டிஜிட்டல் இந்தியா உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் சுகாதார துறை, அஞ்சல் துறை, காசநோய் பிரிவு, சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், முன்னோடி வங்கி போன்ற துறைகளின் சார்பில் திட்டங்கள் குறித்த கண்காட்சி இடம் பெற்றிருந்தது. கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடந்தது.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி தலைவர் அம்பிகா, திருச்சி கள விளம்பர அலுவலர் தேவி பத்மநாபன், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் என். கிருஷ்ணமூர்த்தி(ஆலத்தூர்), மீனாஅண்ணாத்துரை(பெரம்பலூர்), க.ராமலிங்கம் (வேப்பந்தட்டை), மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் தழுதாழை.பாஸ்கர், நகராட்சி துணை தலைவர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் பணிபுரியும்

# வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு 8 புதிய வாகனங்கள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர்,ஆக. 16-

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட ரூ.75.72 இலட்சம் மதிப்பிலான 08 வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வரும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்குதல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் களப் பணியில் ஈடுபடும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.75.72 இலட்சம் மதிப்பிலான 08 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை அலுவலர்களிடம் வழங்கினார்.



காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியம் நாட்டரசன்பட்டு ஊராட்சியில் சுதந்திரதினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி தலைவரும் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க செயலாளருமான படப்பை ஆ.மனோகரன் பங்கேற்றார்.உடன் ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதிமனோகரன், ஊராட்சி மன்ற தலைவர் வசந்திசாம்பசிவம், துணை தலைவர் மஞ்சுளாகார்த்திக் வட்டார வளர்ச்சி அலுவலர் வரதராஜன் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

# சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் சுதந்திர தின விழா!

சென்னை, ஆக.16-

சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று (15.08.2024) சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று (15.08.2024) சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், அவர்கள், சென்னை குடிநீர் வாரியத்தில் 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற முறையில் சிறப்பாகப் பணியாற்றிய பணியாளர்களைப் பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன், பொறியியல் இயக்குநர் மி.ஜெய்கர் ஜேசுதாஸ், பொது மேலாளர் இரா. இராஜகிருபாகரன், தலைமைப் பொறியாளர்கள் ஆர்.சிவமுருகன், இரா.கண்ணன், திருமதி.வி.திகலவதி, கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 170 ‘அ’ வட்டம் களிக்குன்றம் பகுதியில் தமிழ்த்தாய் சிலம்பம் விளையாட்டு சங்கம் சார்பில் கடந்த மே மாதம் கோவா மற்றும் நேபாலில் நடைபெற்ற தேசிய மற்றும் சர்வதேசிய போட்டியில் மாணவர்கள் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதகக்கங்களை வென்றனர். நேற்று 15.08.2024 சுதந்திர தினவிழாவில் 11 ஸ்டார் மற்றும் வின்னர் சி.சி. அணியினர் இணைந்து அவர்களை பாராட்டி விளையாட்டு உபகரணங்கள், உணவு ஆகியவற்றை வழங்கினர். இதில் 170 அ வட்டக் கழகத்தினர், பெற்றோர்கள், பொதுமக்கள், இளைஞர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.